# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
முறையீட்டு மனு எண்: 147/2017/பே

ஆணை எண். 258 /2017/ நாள். 23–11–2017

**திரு. லா. இரா. நடராசன்,**
**லா பவுண்டேஷன்,**
**54 F சிவ சக்தி காம்ப்ளெக்ஸ்,**
செல்வராஜபுரம், சிந்தாமணி புதூர்,
**கோவை மாவட்டம் – 641 103.** — முறையீட்டு மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**கண்ணம்பாளையம் பேரூராட்சி,**
**கோவை மாவட்டம் – 641 402.** — எதிர் மனுதாரர்

ஆணை

திரு லா.இரா. நடராஜன், லா. பவுண்டேஷன், 54.F, சிவசக்தி காம்பளக்ஸ், சிந்தாமணி புதூர், கோவை மாவட்டம், என்கிற முறையீட்டு மனுதாரரின் 08.07.2017 ம் தேதியிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 10.07.2017ல் பெறப்பட்டு எண். 147/2017 ஆக எண்ணிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கோவை மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி இரா. ரேணுகா என்பவர் கண்ணம்பாளையம் பேரூராட்சியினை சேர்ந்த திரு ஆல்பர்ட் என்பவர் ச.எண். 299/3பி–2பி–2ல் பிஷப் ஹவுஸ் கட்டுவதற்கு விண்ணப்பம் செய்த போது மேற்படி விண்ணப்பத்தினை முறையாக கவனிக்காமலும், இதற்கான சாலை மற்றும் பொது இடங்களை பேரூராட்சிக்கு ஒப்படைத்து எழுதிக் கொடுத்த பத்திர எண் 7598/11 ஐ சரிபார்க்காமலும் அனுமதி வழங்கியுள்ளார் என

புகார்களை தெரிவித்து விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண 147/2017/பே.1/நாள் 12.07.2017 ன் மூலம் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், கண்ணம்பாளையம் மேற்படி முறையீட்டு மனுதாரின் புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை தனது கடித எண் ந.க.எண்.250/2015/நாள் 31.07.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின் மீதான ஆட்சேபனை மற்றும் விளக்கம் ஏதுமிருப்பின் தெரிவிக்கும் பொருட்டு முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 147/2017/பே.1/நாள் 22.08.2017ன் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கத்தின் மீதான ஆட்சேபணைகளை, முறையீட்டு மனுதாரர் தனது கடித நாள் 12.09.2017ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். இதில் தான் ஏற்கனவே தெரிவித்துள்ள புகார்களையே மீண்டும் வலியுறுத்தி தெரிவித்துள்ளதோடு, 03.07.2015 கடிதத்தில் குறிப்பிட்டப்பட்ட தவறை மறைத்து கையூட்டு பெற்றுக்கொண்டு கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது மூ.மு.எண் 69/2012/19.10.2015ல் செயல் முறை ஆணை வழங்கியதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு குறித்தான நேரடி விளக்கம் பெறவேண்டி கண்ணம்பளையம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 25.10.2017 பிற்பகல் 3.00 மணிக்கு ஆஜராகி விளக்கம் அளிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 147/2017/பே.1/நாள் 23.09.2017 ன் மூலம் ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது 15.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் தனது வயது மற்றும் உடல் நிலை காரணமாக முறையீட்டு மன்ற நடுவத்தில் 25.10.2017ம் தேதியன்று வர இயலாது என தெரிவித்துள்ளதை ஏற்று முறையீட்டு மனுதாரர் நேரில் விளக்கம் அளிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள, முன்னாள் செயல் அலுவலர் திருமதி ரேணுகா தனது 25.10.2017ம் நாளிட்ட வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"தான் கோவை மாவட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சியில் 29.10.2014 முதல் 18.01.2017 முடிய செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், 08.07.2017ம் நாளிட்ட முறையீட்டு மனுதாரரின் மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். திரு நடராஜன், ஒரு தட்டச்சு நிலையம் வைத்துள்ளதாகவும், அதோடு அங்குள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் Document Writer ஆக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கண்ணம்பாளையம் பேரூராட்சி,

சர்வே எண் 299, 3பி, 2பி 2ல் கட்டிடம் கட்டுவதற்கு Bishop அனுமதி கோரி விண்ணப்பித்து இருந்ததாக தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளாவாறு 08.10.2015 ல் தன்னால் எந்தவிதமான உத்திரவும் பிறப்பிக்கப்படவில்லை என வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். ஆணை எண் 61/2015 நாள் 19.10.2015ல் உத்திரவு தன்னால் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அதற்கு முன்னர் இப்பணிக்கு, கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்திடமிருந்து அங்கீகாரம் பெற்று, சென்னை ஊரக மற்றும் நகரமைப்பு இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதன்பின்னர் மாவட்ட ஆட்சியரின் தடையில்லா சான்றும் பெறப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். இந்த Bishop Houseக்கு அனுமதி வழங்கியதில் எந்த முறைகேடும் நடக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் இது போன்று பல மனுக்களை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் எழுதுவதின் மூலம் தகவல் பெறும் உரிமை சட்ட ஆணையத்தால் கண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அதற்கான ஆதாரமாக தகவல் பெறும் உரிமை சட்ட அலுவலக கடிதத்தினையும் சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆவண எண் 7598/2011 பத்திரம் சற்குணா Textiles என்பவர்களால் பேரூராட்சிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் என தெரிவித்துள்ளார். இதில் பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதியை பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பத்திரமாகும். இதில் பேரூராட்சியுடைய பகுதி என்பது பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சொத்து கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு எழுதி கொடுக்கப்பட்ட சொத்து எனவும் இதில் போலி ஆவணம் என்பது உண்மைக்கு புறம்பானது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இந்த ஆவணத்தில் (ஆவண எண் 7598/2011 ல்) குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் எடுத்துக் கொள்ளப்பட்டு கண்ணம்பாளையம் பேரூராட்சியுடைய முழு கட்டுப்பாட்டில் உள்ளதகாவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கண்ணம்பாளையம் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு ஆர். ரவி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

....."தான் கண்ணம்பாளையம் பேரூராட்சியில் 18.01.2017 முதல் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், மனுதாரர் ஒரு நிலம் விற்பனை செய்யும் Broker எனவும் அவரது மகன் ஒரு வழக்கறிஞர் எனவும், மனுதாரர் வழக்கறிஞர் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் முன்னாள் செயல் அலுவலர் பணிக்காலத்தில் நடைபெற்றது எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள Bishop House கட்டப்பட்டதாகவும், இன்னும் முடிவு அறிக்கை வரப்பெறாததால் வரிவிதிப்பு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இச்சான்றினை பெற்று மேற்படி கட்டிடத்தில் குடியேறிய நாள் முதல் வரி விதிப்பு செய்து வசூலிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். மனுதாரர் தான் கட்டியுள்ள வீட்டிற்கு "குடியிருப்பதற்கு" என குறிப்பிட்டு அனுமதி பெற்றுள்ளதாகவும், ஆனால் மேற்படி

இடத்தில் வணிக நோக்கத்துடன் "Hardwares" கடை நடத்தி வருவதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அவருடைய கட்டிடம் கட்ட அனுமதி வாங்கிய வரைபடத்தினை வைத்து தற்போது உண்மையில் கட்டியுள்ள இடத்தினை அளந்து வணிக ரீதியாக கட்டப்பட்டுள்ள இடத்திற்கு அதற்குரிய வரிவிதிப்பு செய்து வரி வசூலிக்க நடவடிக்கை எடுப்பதாக தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, கண்ணம்பாளையம் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, இப்பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திருமதி ரேணுகா, மற்றும் தற்போதைய செயல் அலுவலர் திரு ஆர்.ரவி ஆகியோரின் நேரடி வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு முடிவு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

புகார் மனுதாரர் தெரிவித்துள்ள புகார் மனுவுடன் இணைத்துள்ள பத்திர நகல் எண் 7598/2011 ல் பக்கம் 1ல் கண்ணம்பாளையம் கிராம சர்வே எண் 299 /3பி, 2பி, 2பி யில் உள்ள பொது சொத்துக்கள் மேதகு ஆளுநர், தமிழ்நாடு அவர்களுக்காக மேற்படியாரின் பிரதிநிதி கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கண்ணம்பாளையம் பேரூராட்சிக்காக என எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் இச்சொத்து கண்ணம்பாளைம் பேரூராட்சிக்கு உரியது என்பது ஊர்ஜிதமாகிறது. மேலும் கண்ணம்பாளையம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர், திருமதி ரேணுகா தனது வாக்குமூலத்தில் மனுதாரர் தெரிவித்துள்ள நாளான 08.10.2015 அன்று எந்த உத்திரவும் வழங்கப்படவில்லை எனவும், மேற்படி Bishop House கட்டுவதற்கு கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், மற்றும் நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர், சென்னை ஆகியோரின் அனுமதி பெறப்பட்டும், மாவட்ட ஆட்சியரின் தடையின்மை சான்றினை பெற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதையும் ஏற்புக்குரியதாகும் . மேலும் மனுதாரர் இது போன்று தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பல மனுக்கள் எழுதியதைத் தொடர்ந்து தகவல் ஆணையத்தின் மூலம் கண்டிக்கப்பட்டதாகவும் தெரிவித்து சமர்ப்பித்துள்ள கடித நகலினையும் இம்முறைமன்ற நடுவம் பரிசீலித்தது. இதன் மூலம் பேரூராட்சி செயல் அலுவலர் கண்ணம்பாளையம் மூலம் வழங்கப்பட்ட கட்டிட அனுமதியும் பெறப்பட்ட பொது சொத்துக்களும் முறையாகவே பெறப்பட்டுள்ளது தெரியவருகிறது. Bishop House, கட்டிட அனுமதி வழங்கப்பட்ட அளவுக்குள் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்தும் மேலும் விதிகளின்படி உரிய நாள் முதல் சொத்து வரி வசூலிக்கவும் உரிய முறையான சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும் செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

மேலும் கண்ணம்பாளையம் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர், முறையீட்டு மனுதாரர் தான் கட்டியுள்ள வீட்டிற்கு "குடியிருப்பதற்காக" என அனுமதி பெற்று அக்கட்டிடத்தில் Hardwares கடை வைத்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை இம்முறைமன்ற பரிசீலித்து மேற்படி கட்டிடத்தினை உடன் ஆய்வு செய்து ஏற்கனவே வழங்கியுள்ள அனுமதியின் அடிப்படையில் விதிக்கப்பட்ட வரி விதிப்பினை விதிமுறைகளின்படி ரத்து செய்து வியாபார நோக்கில் உபயோகிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய விதிமுறைகளின்படி வரி விதிப்பு

செய்து, எந்த தேதி முதல் இவ்வியாபார நோக்கில் இக்கட்டிடம் செயல்படுகிறது என்பதை கண்டறிந்து அந்த தேதி முதல் உரிய வரிவிதிப்பினை விதித்து அதற்கான தொகையினை வசூலித்து அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கக் கோரி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-நாள் கையொப்பமிட்டுட அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்

1.திரு. வா. இரா. நடராசன்,
லா பவுண்டேஷன்,
54 F சிவ சக்தி காம்ப்ளெக்ஸ்,
செல்வராஜபுரம், சிந்தாமணி புதூர்,
கோவை மாவட்டம் - 641 103.

2.செயல் அலுவலர்,
கண்ணம்பாளையம் பேரூராட்சி,
கோவை மாவட்டம்.